**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் :SC.No.598/2025**
**வழக்கு சாட்சி PW–7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரஸ்வதி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | லட்சுமணன் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 46 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 30.07.2026.

**(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி மாவட்டம் மாவட்ட குற்ற பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு, நான் தென்காசி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, அச்சன்புதூர் பொறுப்பு காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். கடந்த 23.11.2020ம் தேதி, அச்சன்புதூர் காவல்நிலைய குற்றஎண்.287/2020 வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

அதே தேதி, 16.30 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் இசக்கித்துரை மற்றும் விஜயன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆகும். வரைபடம்

**அ.சா.ஆ.5 ஆகும்.** சாட்சிகள் தலைமைக்காவலர் முருகன், கோவிந்தன், உதவி ஆய்வாளர் சஞ்சய்காந்தி, இசக்கித்துரை மற்றும் விஜயன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், காவல்நிலையத்தில் இருந்த 2வது எதிரி சங்கிலி என்பவரை அதே தேதியில் 20.00 மணியளவில் காவல்நிலையத்தில் வைத்து கைது செய்து சாட்சிகள் பால்மகேந்திரன் மற்றும் வெளியப்பராஜா ஆகியோர் முன்னிலையில் விசாரிக்க எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன்.
(ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்படவேண்டிய பகுதி இல்லை என்பதால் குறியீடு செய்யப்படவில்லை.)

பின்னர் சாட்சிகள் பால்மகேந்திரன், வெளியப்பராஜா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கில் உதவி ஆய்வாளர் சஞுசய்காந்தியால் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.6** ஆகும். அத்துடன் என்னுடைய முதல் விசாரணையை முடித்து வழக்கு கோப்பினை காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

அ.சா.1 சம்பவயிடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றார் என்று

என்னுடைய விசாரணையில் துலங்கவில்லை. 2வது எதிரியை அ.சா.1 எந்த இடத்திலிருந்து அழைத்து சென்றார் என்ற விபரத்தை என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஃபோர்குழாயில் இருந்து துப்பாக்கியை யார் எடுத்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர் எடுத்துள்ளார். சம்பவ வழக்கு விபரங்கள் காவல் நிலைய பொதுநாட்குறிப்பில் துலங்கும் என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு இருசக்கரவாகனத்தில் 20 நிமிடத்தில் சென்று விடலாம் என்றால் சரிதான்.

2ம் எதிரியை அ.சா.1 கைது செய்யாமல் அத்தாட்சி தயார் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கில் கைப்பற்றப்பட்டதாக கூறப்பட்டுள்ள கெமிக்கல் பொடி எவ்வளவு கிராம் எடையுடையது என்று குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். சம்பவயிடம் திறந்த வெளி என்றால் சரிதான், அது தோப்பாகும்.

நான் சொன்ன நாள், நேரத்தில் எந்தவிதமான ரோந்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரியிடமிருந்து எந்தவிதமான பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றாலும், ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றாலும், நான் காவல்நிலைய புள்ளி விபரக்கணக்கிற்காக படிப்பறிவில்லாத எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்து, அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

**இல்லை.**

J
CHRISTAL
BABITHA

Digitally signed
by J CHRISTAL
BABITHA
Date: 2026.07.31
13:14:52 +0530